**009/DD/20**

T.C-153

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR LOCAL FUND AUDIT AND INTERNAL AUDIT DEPARTMENTS

(Without Books)

Maximum Time : 1.30 hours Maximum Marks : 60

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

NB : **Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 60 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.
இவ்வினாத்தாள் 60 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answer all questions. All questions carry equal marks.
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best**.

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.

வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.

விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.

வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. In Municipalities, which Journal Voucher is used to record purchase of materials

(A) Expenses Journal Voucher (B) Contractors Journal Voucher

(C) Purchase Journal Voucher (D) General Journal Voucher

நகராட்சிகளில் கொள்முதலுக்கு தயார் செய்யப்படும் செலவினக் குறிப்புச்சீட்டு யாது?

(A) செலவினக் குறிப்புச்சீட்டு (B) ஒப்பந்தக்காரர் குறிப்புச்சீட்டு

(C) கொள்முதல் குறிப்புச்சீட்டு (D) பொதுக் குறிப்புச்சீட்டு

2. In Municipalities, fixed asset journal voucher is used to record

(A) Value of work executed by contractors

(B) All expenditure bills

(C) Capitalization of completed projects

(D) To record purchase of materials

நகராட்சிகளில் நிலையான சொத்து குறிப்புச்சீட்டு தயார் செய்யப்பட வேண்டிய நேர்வு

(A) ஒப்பந்தக்காரனின் வேலை மதிப்பு (B) அனைத்து செலவுச்சீட்டுக்களின் போதும்

(C) மூலதன வேலை முடிவுற்றப் பின்னர் (D) பொருட்கள் கொள்முதலின் போது

3. New Accounting System in Urban Local Bodies was introduced with effect form

(A) 01.04.1999 (B) 01.04.2001

(C) 01.04.2000 (D) None of the above

நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் இயல்புநிலைக் கணக்கு முறை எந்த தேதியிலிருந்து அறிமுகம் செய்யப்பட்டது.

(A) 01.04.1999 (B) 01.04.2001

(C) 01.04.2000 (D) இவற்றில் ஏதுமில்லை

4. MGNREGS Scheme is operated by

(A) Block Development Officer (BP)
(B) Block Development Officer (VP)
(C) The District Collector
(D) Municipal Commissioner

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் யாரால் செயல்படுத்தப்படுகிறது

(A) வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
(B) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
(C) மாவட்ட ஆட்சியர்
(D) நகராட்சி ஆணையர்

5. In Municipalities Funds Transaction are classified into

(A) 5
(B) 3
(C) 4
(D) 6

நகராட்சிகளில் எத்தனை வகையான நிதிக்கணக்குகள் பேணப்படுகின்றன?

(A) 5
(B) 3
(C) 4
(D) 6

6. In Municipalities, Administrative Expenses comes under which major head of account

(A) 110
(B) 230
(C) 150
(D) 220

நகராட்சிகளில் நிர்வாக செலவினங்கள் எந்த கணக்கு குறியீட்டின் கீழ் கணக்கிடப்படுகிறது-

(A) 110
(B) 230
(C) 150
(D) 220

7. In Municipalities, Election expenses comes under which major head of account

(A) 271
(B) 250
(C) 220
(D) 130

நகராட்சிகளில் தேர்தல் செலவினங்கள் எந்த கணக்கு குறியீட்டின் கீழ் கணக்கிடப்படுகிறது

(A) 271
(B) 250
(C) 220
(D) 130

8. In Municipalities, Secured Loans comes under which major head of account

(A) 250 (B) 330

(C) 410 (D) 350

நகராட்சிகளில் கடன்கள் எந்த கணக்கு குறியீட்டின் கீழ் கணக்கிடப்படுகிறது-

(A) 250 (B) 330

(C) 410 (D) 350

9. In Municipalities, Fixed Assets comes under which major head of account

(A) 421 (B) 412

(C) 420 (D) 410

நகராட்சிகளின் நிலையான சொத்துக்கள் எந்த கணக்கு குறியீட்டின் கீழ் கணக்கிடப்படுகிறது-

(A) 421 (B) 412

(C) 420 (D) 410

10. Whom approves the building plan in Village Panchayat

(A) The District Collector (B) Commissioner

(C) Panchayat President (D) Approval not necessary

கிராம ஊராட்சிகளில் கட்டிடங்கள் கட்டுவதற்கு யாரிடம் அனுமதி பெறவேண்டும்

(A) மாவட்ட ஆட்சியர் (B) ஆணையாளர்

(C) ஊராட்சித் தலைவர் (D) அனுமதி பெறவேண்டியதில்லை

11. Rate of audit fees of wakf institution is

(A) 3%
(B) 5%
(C) 2.5%
(D) 1.5%

வக்பு வாரியத்தின் தணிக்கை கட்டண சதவீதம்

(A) 3%
(B) 5%
(C) 2.5%
(D) 1.5%

12. How many times the physical verification of stock of Khadi Unit should be conducted in a financial year

(A) 1
(B) 2
(C) 3
(D) None

ஒரு நிதியாண்டில் எத்தனை முறை காதி வாரியத்தில் இருப்பு சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்

(A) 1
(B) 2
(C) 3
(D) இவற்றில் ஏதுமில்லை

13. What is the retirement age of Noon Meal cook in School Noon Meal Centres

(A) 58
(B) 60
(C) 55
(D) 50

பள்ளி சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையலரின் ஓய்வு பெறும் வயது

(A) 58
(B) 60
(C) 55
(D) 50

14. In Municipalities, tax revenue comes under which major head of account

(A) 110 (B) 250

(C) 120 (D) 170

நகராட்சிகளில் வரி வருவாய் எந்த கணக்கு குறியீட்டின் கீழ் கணக்கிடப்படுகிறது

(A) 110 (B) 250

(C) 120 (D) 170

15. How many times the service verification entry should be made in the service register per year

(A) 2 (B) 1

(C) 3 (D) 4

பணிப்பதிவேட்டில் பணி சரிபார்ப்பு சான்று ஓராண்டிற்கு எத்தனை முறை பதிவு செய்யப்பட வேண்டும்

(A) 2 (B) 1

(C) 3 (D) 4

16. The rate of education cess on income tax to be charged on TDS amount

(A) 1% (B) 2%

(C) 5% (D) None

வருமான வரியுடன் சேர்த்து பிடித்தம் செய்யப்பட வேண்டிய கல்வி வரி

(A) 1% (B) 2%

(C) 5% (D) ஏதுமில்லை

17. What is the duration period for renewal of Black topping

(A) 6 Years (B) 3 Years

(C) 1 Years (D) 4 Years

தார்ச்சாலை புதுப்பிக்கப்பட வேண்டிய உச்சபட்ச காலம்

(A) 6 வருடங்கள் (B) 3 வருடங்கள்

(C) 1 வருடங்கள் (D) 4 வருடங்கள்

18. What is the 100% grant eligibility for aided Polytechnics

(A) Pay
(B) Dearness Allowance
(C) Construction cost
(D) Garden Maintenance

உதவிபெறும் தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு 100 சதவீத மான்யத்திற்கு தகுதியான செலவினம்

(A) ஊதியம்
(B) அகவிலைப்படி
(C) கட்டுமானச் செலவு
(D) தோட்ட பராமரிப்பு

19. Rate of Income Tax to be recovered from the Departmental Work is

(A) 5%
(B) 1%
(C) 1.5%
(D) None

துறை ரீதியான வேலைகளில் பிடித்தம் செய்யப்பட வேண்டிய வருமான வரி

(A) 5%
(B) 1%
(C) 1.5%
(D) ஏதுமில்லை

20. What is the Group Insurance contribution amount to be paid by the administration of Panchayat Union for LF-I Staff per month

(A) 55
(B) 165
(C) 115
(D) 60

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தல நிதிக்கணக்கு எண் I–ல் ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு நிர்வாகத்தால் செலுத்தப்பட வேண்டிய குழும காப்பீட்டு நிர்வாக பங்குத் தொகை பிரதி மாதம் எவ்வளவு

(A) 55
(B) 165
(C) 115
(D) 60

21. Pre measurement is done in

(A) Collection of Metal
(B) Jungle Clearance
(C) Sand Collection
(D) None of the above

முன் அளவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள்

(A) கல் சேகரித்தல்
(B) முட்செடிகள் அகற்றுதல்
(C) மணல் சேகரிப்பு
(D) இவற்றில் ஏதுமில்லை

22. In Municipalities, Entertainment Tax comes under which major head of account

(A) 220 (B) 170

(C) 120 (D) 150

நகராட்சிகளில் கேளிக்கை வரி எந்த கணக்கு குறியீட்டின் கீழ் கணக்கிடப்படுகிறது

(A) 220 (B) 170

(C) 120 (D) 150

23. Swachh Bharat Mission Gramin Scheme in Panchayat Union is operated by

(A) Block Development Officer (VP) (B) Project Director

(C) The District Collector (D) Block Development Officer (BP)

ஊராட்சி ஒன்றியங்களில் தூய்மை பாரத இயக்கம் யாரால் செயல்படுத்தப்படுகிறது

(A) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) (B) திட்ட இயக்குநர்

(C) மாவட்ட ஆட்சியர் (D) வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)

24. In Municipalities, salaries comes under which head of expenses

(A) Establishment Expenses (B) Administrative Expenses

(C) Operations and Maintenance (D) Program Expenses

நகராட்சிகளில் ஊதியச் செலவினம் எந்த கணக்கு குறியீட்டின் உள்ளது

(A) பணிக்குழு செலவினம் (B) நிர்வாக செலவினம்

(C) இயக்குதலும் பராமரித்தலும் (D) திட்ட செலவினம்

25. How much amount to be paid as assistance to the pensioners from the family benefit fund

(A) Rs. 50,000/- (B) Rs. 1,00,000/-

(C) Rs. 1,50,000/- (D) None of the above

ஓய்வூதியதாரர்களுக்கு குடும்ப நல நிதியிலிருந்து வழங்கப்படும் உதவித்தொகை எவ்வளவு?

(A) ரூ. 50,000/– (B) ரூ. 1,00,000/–

(C) ரூ. 1,50,000/– (D) இவற்றில் ஏதுமில்லை

26. When an advance will be time barred?

(A) After 3 Years
(B) After 6 Years
(C) After 4 Years
(D) After 5 Years

முன்பணத்தொகை எப்போது காலாவதியாகும்?

(A) 3 ஆண்டுகளுக்குப்பிறகு
(B) 6 ஆண்டுகளுக்குப்பிறகு
(C) 4 ஆண்டுகளுக்குப்பிறகு
(D) 5 ஆண்டுகளுக்குப்பிறகு

27. Rate of Security Deposit to be recovered from the Departmental work is

(A) 2%
(B) 1%
(C) 1.5%
(D) None

துறை ரீதியான வேலைகளில் பிடித்தம் செய்யப்பட வேண்டிய காப்புத் தொகை

(A) 2%
(B) 1%
(C) 1.5%
(D) ஏதுமில்லை

28. How much amount of festival advance of Panchayat Union employees

(A) Rs. 1,000/-
(B) Rs. 2,000/-
(C) Rs. 5,000/-
(D) Rs. 10,000/-

ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கு விழா கால முன்பணத்தொகை எவ்வளவு?

(A) ரூ. 1,000/–
(B) ரூ. 2,000/–
(C) ரூ. 5,000/–
(D) ரூ. 10,000/–

29. Rate of GST to be recovered from the Departmental work is

(A) 5%
(B) 1%
(C) 12%
(D) None

துறை ரீதியான வேலைகளில் பிடித்தம் செய்யப்பட வேண்டிய சரக்கு மற்றும் சேவை வரி

(A) 5%
(B) 1%
(C) 12%
(D) ஏதுமில்லை

30. Rate of Labour Welfare Fund to be recovered from the Departmental work is

(A) 1%
(B) 2%
(C) 0.3%
(D) None

துறை ரீதியான வேலைகளில் பிடித்தம் செய்யப்பட வேண்டிய தொழிலாளர் நல நிதி தொகை

(A) 1%
(B) 2%
(C) 0.3%
(D) ஏதுமில்லை

31. Labour Welfare fund should be recovered on the basis of

(A) Estimate Amount
(B) Value of work done
(C) Tender Amount
(D) Bill Net Amount

தொழிலாளர் நல நிதித்தொகை எதனடிப்படையில் பிடித்தம் செய்யப்படுகிறது?

(A) மதிப்பீட்டுத்தொகை
(B) வேலைப்பட்டியல் மதிப்புத்தொகை
(C) ஒப்பந்தத்தொகை
(D) பட்டியல் நிகரத்தொகை

32. In Town Panchayat, annual account prior year income account code number is

(A) 1088
(B) 1098
(C) 2040
(D) 3040

பேரூராட்சி ஆண்டுக்கணக்குகளில் முந்தைய ஆண்டுக்கான வருமானத்தின் கணக்கு குறியீடு எண்

(A) 1088
(B) 1098
(C) 2040
(D) 3040

33. In Financial Accounting System for every debit there will be a

(A) Asset (B) Liability

(C) Credit (D) Deposit

இயல்பு நிலை கணக்கு முறையில் ஒவ்வொரு பற்றுக்கும் நிகராக எது இருக்க வேண்டும்?

(A) சொத்து (B) பொறுப்பு

(C) வரவு (D) வைப்பு

34. Which account has been opened in Treasury for transaction relating to Puratchi Thalaivar MGR Noon Meal Fund in Panchayat Unions?

(A) LF–V (B) LF–II

(C) LF–III (D) None

ஊராட்சி ஒன்றியங்களில் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்ட கணக்கிற்கு கருவூலக கணக்கில் பேணப்படும் தல நிதிக்கணக்கு எண் யாது?

(A) த.நி– V (B) த.நி– II

(C) த.நி– III (D) ஏதுமில்லை

35. All the undisbursed amount is the petty cash book have been refunded in Panchayat Union Treasury account on the last day of ————

(A) Month (B) Week

(C) Financial Year (D) None

ஊராட்சி ஒன்றியங்களில் பட்டுவாடா செய்யப்படாத சிறு ரொக்கப்பதிவேட்டு கையிருப்பு ———— இறுதியில் ஊராட்சி ஒன்றிய கருவூலக கணக்கில் திரும்ப செலுத்தப்படவேண்டும்

(A) மாதம் (B) வாரம்

(C) நிதியாண்டு (D) ஏதுமில்லை

36. All the undisbursed amount in permanent advance register in the Khadi and Village Industries have been refunded to the Assistance Director's Khadi office account on the last day of the ——————

(A) Month
(B) Week
(C) Financial Year
(D) None

காதி மற்றும் கிராம அங்காடியில் நிரந்தர முன்பணக்கணக்கில் பட்டுவாடா செய்யப்படாத தொகை உதவி இயக்குநர் காதி அலுவலகத்திற்கு —————— இறுதியில் திரும்ப செலுத்தப்பட வேண்டும்

(A) மாதம்
(B) வாரம்
(C) நிதியாண்டு
(D) ஏதுமில்லை

37. In respect of contributory pension scheme contribution of the employees should be calculated at —————— % of Pay and DA

(A) 12%
(B) 10%
(C) 9%
(D) 15%

பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தில் பணியாளர்களின் ஊதியத்தில் —————— சதவீதம் ஊதியம் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும்

(A) 12%
(B) 10%
(C) 9%
(D) 15%

38. In Town Panchayat's Bill collector is responsible for —————— % of time barred taxes

(A) 30%
(B) 20%
(C) 40%
(D) 50%

பேரூராட்சிகளில் காலாவதியான வரி இனங்களுக்கு —————— சதவீதம் வருவாய் உதவியாளர் பொறுப்பாவார்

(A) 30%
(B) 20%
(C) 40%
(D) 50%

39. How many number of chitta should be maintained in Municipalities

(A) 1 (B) 2

(C) 3 (D) None

நகராட்சிகளில் எத்தனை சிட்டா பதிவேடுகள் பராமரிக்கப்படுகிறது?

(A) 1 (B) 2

(C) 3 (D) ஏதுவுமில்லை

40. How many number of day books are maintained in Town Panchayats

(A) 2 (B) 3

(C) 4 (D) None of the above

பேரூராட்சிகளில் எத்தனை தினப்புத்தகம் பராமரிக்கப்படுகிறது?

(A) 2 (B) 3

(C) 4 (D) இவற்றில் ஏதுமில்லை

41. Receipt book should be maintained in

(A) Town Panchayats (B) Municipalities

(C) Village Panchayats (D) Universities

வரவினப் புத்தகம் பராமரிக்கப்படுவது

(A) பேரூராட்சிகளில் (B) நகராட்சிகளில்

(C) கிராம ஊராட்சிகளில் (D) பல்கலைக்கழகங்களில்

42. Calculations of depreciation an annual account in the following local body institution is

(A) Town Panchayats (B) Municipalities

(C) Both A and B (D) None of the above

ஆண்டுக்கணக்குகளில் தேய்மானக்கணக்கு கணக்கிடும் உள்ளாட்சி நிறுவனம்

(A) பேரூராட்சிகள் (B) நகராட்சிகள்

(C) இவை இரண்டிலும் (D) இவற்றில் ஏதுமில்லை

43. In Town Panchayats the post of ———— have been provincialised

(A) Watchman

(B) Office Assistant

(C) Sanitary Worker

(D) Junior Assistant

பேரூராட்சிகளில் ———— பணியிடம் நிலையாக்கப்பட்ட பணியிடமாகும்

(A) காவலர்

(B) அலுவலக உதவியாளர்

(C) துப்புரவு பணியாளர்

(D) இளநிலை உதவியாளர்

44. What is the retirement of age of office assistant?

(A) 58

(B) 60

(C) 59

(D) None of the above

அலுவலக உதவியாளரின் பணி ஓய்வு பெறும் வயது

(A) 58

(B) 60

(C) 59

(D) இவற்றில் ஏதுமில்லை

45. What is the rate of income tax deduction from panchayat union work bill have the PAN card contractors?

(A) 1%

(B) 2%

(C) 3%

(D) None of the above

ஊராட்சி ஒன்றிய வேலைப்பட்டியல்களில் வருமான வரி நிரந்தர கணக்கு எண் உள்ள ஒப்பபந்தகாரரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டிய வருமான வரி சதவீதம்

(A) 1%

(B) 2%

(C) 3%

(D) இவற்றில் ஏதுமில்லை

46. What is the rate of income tax deduction from panchayat union work bill have the PAN card institutions?

(A) 1%
(B) 2%
(C) 3%
(D) None of the above

ஊராட்சி ஒன்றிய வேலைப்பட்டியல்களில் வருமான வரி நிரந்த கணக்கு எண் உள்ள ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டிய வருமான வரி சதவீதம்

(A) 1%
(B) 2%
(C) 3%
(D) இவற்றில் ஏதுமில்லை

47. What is the rate of income tax deduction from panchayat union work bill have not the PAN card contractors?

(A) 10%
(B) 20%
(C) 30%
(D) None of the above

ஊராட்சி ஒன்றிய வேலைப்பட்டியல்களில் வருமான வரி நிரந்தர கணக்கு எண் இல்லாத ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டிய வருமான வரி சதவீதம்

(A) 10%
(B) 20%
(C) 30%
(D) இவற்றில் ஏதுமில்லை

48. Twin aspects of double entry system is called

(A) Personal and impersonal
(B) Debit and Credit
(C) Both above
(D) None of the above

இரட்டைப்பதிவு முறை ஆண்டுக்கணக்கின் அம்சமாவது

(A) தனியார் மற்றும் தனியரல்லாதது
(B) பற்று மற்றும் வரவு
(C) மேற்குறிப்பிட்ட இரண்டும்
(D) இவற்றில் ஏதுமில்லை

49. The Grant of the Individual Household latrine should be release to

(A) Beneficiary

(B) Contractor

(C) Union Engineer

(D) Executive Engineer

தனிநபர் இல்ல கழிப்பறை மான்யத்தொகை யாருக்கு விடுவிக்கப்பட வேண்டும

(A) பயனாளி

(B) ஒப்பந்தகாரர்

(C) ஒன்றிய பொறியாளர்

(D) செயற்பொறியாளர்

50. How much grant of the individual house hold latrine scheme

(A) Rs. 10,000/–

(B) Rs. 12,000/–

(C) Rs. 15,000/–

(D) None of the above

தனிநபர் இல்ல கழிப்பறை மான்யத்தொகை எவ்வளவு?

(A) ரூ. 10,000/–

(B) ரூ. 12,000/–

(C) ரூ. 15,000/–

(D) இவற்றில் ஏதுமில்லை

51. The Tamilnadu Transparency in Tenders act implemented on the year

(A) 1998

(B) 1999

(C) 2000

(D) None of the above

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட ஆண்டு

(A) 1998

(B) 1999

(C) 2000

(D) இவற்றில் ஏதுமில்லை

52. In Municipalities how man classification in property tax on CWBS

(A) 5

(B) 4

(C) 2

(D) None of the above

நகராட்சிகளின் சொத்துவரி ஒருமுகப்படுத்தப்பட்ட மென்பொருள் கணக்கு முறையில் எத்தனை இனங்களாக பிரிக்கப்பட்டுள்ளன

(A) 5

(B) 4

(C) 2

(D) இவற்றில் ஏதுமில்லை

53. The Town Panchayats were classified into

(A) 4 (B) 5

(C) 3 (D) None of the above

பேரூராட்சிகள் எத்தனை வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது

(A) 4 (B) 5

(C) 3 (D) இவற்றில் ஏதுமில்லை

54. In Municipalities Head of accounts are classified into

(A) 3 (B) 4

(C) 5 (D) 6

நகராட்சிகளில் கணக்கு குறியீடுகளின் வகைகள் எத்தனை வகையாக பிரிக்கப்பட்டுள்ளன

(A) 3 (B) 4

(C) 5 (D) 6

55. What is the rate of audit fees in Chennai District Library authorities

(A) Actual Cost

(B) 50% of the actual cost

(C) Free of Cost

(D) None of the above

சென்னை மாநகர நூலக ஆணைக்குழுக்களின் தணிக்கைக்கு தணிக்கை கட்டணம்

(A) உள்ளபடியான தணிக்கை செலவு

(B) உள்ளபடியான செலவில் 50%

(C) கட்டணம் ஏதுமில்லை

(D) இவற்றில் ஏதுமில்லை

56. Who is the special officer of the Village Panchayat at present

(A) Block Development Officer (BP) (B) Block Development Officer (VP)

(C) The District Collectors (D) Tahsildar

கிராம ஊராட்சிகளின் தற்போதைய தனி அலுவலர் யார்?

(A) வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) (B) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)

(C) மாவட்ட ஆட்சியர் (D) வட்டாட்சியர்

57. How to release individual house hold grant to beneficiaries?

(A) Through Cash (B) Through Cheque

(C) Demand Draft (D) ECS

தனிநபர் இல்ல கழிப்பறை திட்ட மான்யம் பயனாளிகளுக்கு எவ்வாறு விடுவிக்கப்பட வேண்டும்

(A) ரொக்கமாக (B) காசோலையாக

(C) வங்கி வரைவோலையாக (D) மின்னனு பரிவர்த்தனை மூலம்

58. Whom levied the House Tax in Village Panchayats?

(A) Panchayat President (B) Panchayat Secretary

(C) The District Collector (D) Tahsildar

கிராம ஊராட்சிகளில் சொத்து வரி யாரால் நிர்ணயம் செய்யப்படுகிறது?

(A) ஊராட்சித் தலைவர் (B) ஊராட்சி செயலாளர்

(C) மாவட்ட ஆட்சியர் (D) வட்டாட்சியர்

59. Whom conduct the Village Panchayat Audits in Panchayat Unions?

(A) Deputy Block development officer (B) Panchayat Secretary

(C) Panchayat President (D) None of the above

ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சிகளின் தணிக்கை யாரால் மேற்கொள்ளப்படுகிறது

(A) துணைவட்டார வளர்ச்சி அலுவலர் (B) ஊராட்சி செயலாளர்

(C) ஊராட்சித் தலைவர் (D) இவற்றில் யாருமில்லை

60. The Second Level officer of the Panchayat Union is

(A) Deputy Block development officer (Admin)

(B) Panchayat Union Chairman

(C) Accountant

(D) None of the above

ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டாம் நிலை அலுவலர் யார்?

(A) துணைவட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்)

(B) ஊராட்சி ஒன்றியத் தலைவர்

(C) கணக்காளர்

(D) இவற்றில் யாருமில்லை

009/DD/20

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR LOCAL FUND AUDIT AND INTERNAL AUDIT DEPARTMENTS

(With Books)

Maximum Time : 1 hour

Maximum Marks : 40

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Answer any EIGHT of the following.**

கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் எட்டு கேள்விகளுக்கு பதில் அளிக்கவும்.

**(8 × 5 = 40)**

1. Differentiate between House Tax and Property Tax.

வீட்டுவரிக்கும் சொத்துவரிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

2. What are all the procedures of refund of laps and deposits in municipalities?

நகராட்சிகளின் காலங்கடந்த வைப்புத்தொகையை திரும்ப வழங்குவதற்கான நடைமுறைகள் யாவை?

3. Write short notes on Immediate Post Audit.

உடன்பின் தணிக்கை சிறுகுறிப்பு வரைக.

4. What is mean by Post Audit and Pre Audit?

முன் தணிக்கை மற்றும் பின் தணிக்கை என்றால் என்ன?

5. What is Revised Estimate and Supplement Estimate? and When it is prepared?

திருத்திய மதிப்பீடு மற்றும் துணை மதிப்பீடு என்றால் என்ன? அவை எவ்வப்போது தயார் செய்யப்பட வேண்டும்?

6. What are all the powers and functions of the Director of Local Fund Audit as per local fund audit rules 2016?

உள்ளாட்சி நிதி தணிக்கை விதிகள் 2016–ன் படி, உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநரின் அதிகாரிகள் மற்றும் செயற்பணிகள் யாவை?

7. What are all the safeguards are to be undertaken to protect the interest of the local body after completion of works by contract?

உள்ளாட்சி நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையில் வேலை முடிக்கப்பட்ட பின்னர் வேலையின் தரம் மற்றும் உத்தரவாதம் எந்தெந்த வகைகளில் கண்காணிக்கப்படுகிறது?

8. What is the cost of audit of the accounts of the following local authority or local fund his payable under section 17 of the local fund audit act 2014.

(a) Universities

(b) Municipal Corporations and Municipalities

(c) Market Committee

(d) Local Planning Authorities

(e) Local Library Authorities other than Chennai City

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 பிரிவு 17–ன் படி பின்வரும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தணிக்கை கட்டணம் எவ்வாறு விதிக்கப்படுகிறது?

(அ) பல்கலைக்கழகங்கள்

(ஆ) மாநகராட்சி மற்றும் நகராட்சிகள்

(இ) மேலாண்மை விற்பனை குழுக்கள்

(ஈ) உள்ளூர் திட்ட குழுமங்கள்

(உ) சென்னை மாநகரம் நீங்கலாக இதர மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள்

9. An assessee remits Rs. 2,000/- towards property tax for 2017–18 first half year, (General purpose Rs. 767/-, Water supply and Drainage Tax Rs. 818/-, Education Tax Rs. 256/- and Library Cess Rs. 159/-) Journalise the transaction?

ஒரு வரிவிதிப்பாளர் 2017–18 ம் ஆண்டு முதல் அரையாண்டிற்கு ரூ. 2,000/– சொத்து வரி நகராட்சிக்கு செலுத்துகிறார். (இதில் பொதுப்பயன்பாடு ரூ. 767/–, குடிநீர் வரி ரூ. 818/–, கல்வி வரி ரூ. 256/– மற்றும் நூலக வரி ரூ. 159/–) இந்நடவடிக்கைக்கு வரவின குறிப்புச்சீட்டு தயார் செய்யவும்.

10. SFC Grant for the first quarter of 2017-2018 was received through ECS and credited to collection Bank Account on 10.08.2018 Rs. 25,00,000/- to the Municipality and recovery of Pension Contribution to LF Director Chennai Rs. 10,00,000/- (Total allotted amount Rs. 35,00,000/-) Journalise the transaction.

ஒரு நகராட்சியில் 2017-–18ம் ஆண்டிற்கான முதல் காலாண்டு மான்யம் ரூ. 25,00,000/–ம் மின்னனு பரிவர்த்தனை மூலம் 10.08.2018-அன்று வங்கி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.10,00,000/–ம் ஒய்வூதிய பங்குத்தொகைக்காக உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநருக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. (மொத்த மான்யம் ரூ. 35,00,000/–) இதற்கு வரவின நடவடிக்கை சீட்டு தயார் செய்யவும்.

---